செய்தி வெளியீடு எண். 22 நாள். 10.01.2018

# திருவள்ளூர் மாவட்டத்தில் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை வழங்கப்படுகிறது - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ,ப., அவர்கள் தகவல்

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை வழங்கும் திட்டம் தமிழ்நாடு அரசினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. படித்துவிட்டு வேலைவாய்ப்பு வேண்டி வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 5 வருடம் மற்றும் அதற்கு மேலும் காத்திருக்கும் இளைஞர்களுக்கு, பத்தாம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெறாத பதிவுதாரர்களுக்கு மாதம்தோறும் ரூ.200/- உதவித்தொகையும், பத்தாம் வகுப்பு தேர்வில் தேர்ச்சியடைந்தவர்களுக்கு மாதந்தோறும் ரூ.300/- உதவித்தொகையும், பன்னிரெண்டாம் வகுப்பு / தொழிற்கல்வி பட்டயப்படிப்பு தேர்வில் தேர்ச்சி அடைந்தவர்களுக்கு மாதம் ரூ.400/- உதவித்தொகையும், பட்டப்படிப்பு தேர்வில் தேர்ச்சியடைந்தவர்களுக்கு மாதம் ரூ.600/- உதவித்தொகையும் வழங்கப்படுகிறது.

மேற்கூறிய உதவித்தொகை பெறுவதற்கு: வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து தொடர்ந்து பதிவினை புதுப்பித்து 5 வருடங்கள் காத்திருக்க வேண்டும், பொதுப்பிரிவினருக்கு வயது வரம்பு 40-ம் தாழ்த்தப்பட்ட / பழங்குடியினருக்கு வயது 45-க்குள் இருக்க வேண்டும், கல்வி நிறுவனத்தில் தினசரி சென்று பயிலுபவராக இருக்கக்கூடாது, பெற்றோர்கள் ஆண்டு வருமானம் ரூ 50,000/-க்குள் இருக்க வேண்டும்.

மேற்கூறியவாறு தகுதியும், உதவித்தொகை பெற விருப்பமும் உள்ளவர்கள் 31.01.2018 வரை திருவள்ளூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு, வேலைவாய்ப்பு அலுவலக அடையாள அட்டை மற்றும் அனைத்து அசல் கல்விச் சான்றிதழ்களுடன் நேரில் வந்து விண்ணப்பப் படிவம் பெற்றுக்கொள்ளலாம்.

மாற்றுத் திறனாளிகளுக்கு இந்த உதவித் தொகை திட்டத்தின்படி: எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி மற்றும் அதற்கு குறைவான கல்வித் தகுதியுடையவர்களுக்கு மாதம் ரூ.600/-ம், 12ஆம் வகுப்பு / தொழிற்கல்வி பட்டயப் படிப்பில் தேர்ச்சி அடைந்தவர்களுக்கு மாதம் ரூ.750/-ம், பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு மாதம் ரூ.1,000/-ம் வழங்கப்பட்டு வருகிறது. மாற்றுத்திறனாளிகளை பொருத்தவரையில் உச்ச வயது வரம்பு ஏதுமில்லை. இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப. அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**